# தமிழ் வளர்ச்சி

மானியக் கோரிக்கை எண். 46

கொள்கை விளக்கக் குறிப்பு

2012 – 2013

**என்.ஆர். சிவபதி**

பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை
அமைச்சர்

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்
செய்தித் துறை

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழ் வளர்ச்சி இயக்ககம் | 4–17 |
| | மொழிபெயர்ப்புப் பிரிவு – தலைமைச் செயலகம் | 18–19 |
| | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் | 20–23 |
| | செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம் | 24 |
| | தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் | 25–30 |
| | ஆசியவியல் நிறுவனம் | 31 |
| 2. | 2012–13 ஆம் ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு | 33 |
| 3. | 2012–2013 ஆம் ஆண்டு பகுதி II திட்டப் பணிகளுக்கான விவரப்பட்டியல் | 34–35 |

**தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்**

**செய்தித் துறை**

**“அறிவுச் செல்வங்கள் அனைத்தையும் தமிழுக்குக் கொண்டு வரவேண்டும், இனிவரும் நூற்றாண்டுகளுக்கும் அருந்தமிழை ஆற்றல் படுத்த வேண்டும்”**

**– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா**

**எட்டாம் உலகத் தமிழ் மாநாடு, தஞ்சாவூர்–1995**

# தமிழ் வளர்ச்சி

கொள்கை விளக்கக் குறிப்பு 2012–2013

**‘தமிழுக்கும் அமுதென்று பேர்’** என்ற பாவேந்தர் பாரதிதாசன் பாட்டு வரி தமிழின் இனிமையை பறைசாற்றும். நம் தமிழ் மொழி:

---

செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப்பு உடைத்து. (குறள்–112)

உலகப் பொதுமறையாம் திருக்குறளைப் பெற்ற உன்னத மொழி;

திராவிட மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி

சீரிளமைக் குன்றாத செவ்வியல் மொழி

பழமைக்கும் பழமையான மொழி

வளமான மொழி

தூய்மையான மொழி

எம்மொழிக் கலப்பும் இல்லாமல் தனித்தியங்க வல்ல மொழி

மொழிக்கு மட்டும் இலக்கணம் வகுக்காமல் வாழ்வு நெறிக்கும் இலக்கணம் வகுத்த மொழி அதுவே நமது ஆட்சிமொழி.

சித்திரையில் புத்தாண்டு காணும் சீர்மிகுந்த தமிழ்த்தாயின் புகழைப் பாடும் நாமக்கல் கவிஞர்,

***'தமிழன் என்றோர் இனமுண்டு***

***தனியே அவர்க்கோர் குணமுண்டு'***

என்று பாடித் தமிழரின் பண்பாட்டையும் மொழிச் சிறப்பையும் பறைசாற்றுகின்றார்.

---

சமன்செய்து சீர்தூக்குங்கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி. (குறள்– 118)

தமிழ் மொழிக்குப் பதினாறு வகையான சிறப்புகள் உள்ளன.

- பெயர்ச் சிறப்பு
- எளிமை
- தொன்மை
- எழுத்துச் சிறப்பு
- ஒலி நயம்
- கலை
- இசை
- இலக்கியம்
- இனிமை
- தனித்துவச் சிறப்பு
- சுழி
- சொல் நயம்
- கவிதை
- மருத்துவம்
- நாடகம்
- இலக்கணம்

உலக மொழிக் குடும்பங்களில் தமிழ் மொழி தனக்கென்று இலக்கணம் வகுத்து, இலக்கியங்கள் படைத்து வாழ்வியல் நெறிகளை உலகமே வியந்து பாராட்டும் வகையில் நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டதாகும்.

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சிப் பணிகளை, கீழ்க்கண்ட துறைகள் வழியாக தளர்வின்றிச் செம்மையாக செயற்படுத்தப்பட்டு வருகிறது,.

தமிழ் வளர்ச்சி இயக்ககம்

மொழிபெயர்ப்புப் பிரிவு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்,

தமிழ்ப் பல்கலைக்கழகம்,

ஆசியவியல் நிறுவனம்

---

யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (குறள்- 127)

## தமிழ் வளர்ச்சி இயக்ககம்

பழமையும் சீரிளமைத் திறமும் கொண்ட மொழி நம் தாய் மொழி தமிழாகும். ஆட்சிமொழியாக விளங்கும் தமிழின் வளர்ச்சியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது தலைமையிலான அரசு மிகுந்த ஈடுபாடும் அக்கறையும் கொண்டுள்ளது.

ஆட்சிமொழியின் பயன்பாட்டினை அரசு நிருவாகத்தில் மேம்படுத்தும் நோக்கில் ஆட்சிமொழிக் குழுவாக 1957இல் உருவாக்கப்பட்டு பின்னர் 1968 முதல் தமிழ் வளர்ச்சி இயக்ககமாக மாற்றப்பட்டது.

ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் தொடர்பான ஆய்வுப் பணிகளும் தமிழ் வளர்ச்சித் தொடர்பான பிற பணிகளும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

### ஆட்சிமொழி ஆய்வு

அரசின் அனைத்துத் துறைகளிலும், பணிகளிலும் ஆட்சி மொழியாகிய தமிழ் முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தினை நிறைவேற்றும் வகையில் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்க ஆய்வுப்பணி மேற்கொள்ளப்படுகிறது.

### ஆட்சிமொழிக் கருத்தரங்குகள்

ஆட்சிமொழித் திட்டம் தொடர்பாக அரசுப் பணியாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தித் திட்டத்தைச் சிறப்பாகச் செயற்படுத்துவதற்காக அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன.

---

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு. (குறள் – 129)

**ஆட்சிமொழிப் பயிலரங்குகள்**

ஆண்டுதோறும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆட்சிமொழிப் பயிலரங்குகள் ரூ.10.00 இலட்சம் செலவில் இரண்டு நாள்கள் நடத்தப்படுகின்றன.

**ஆட்சிமொழித் திட்டப் பயிற்சி**

தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில், இரண்டு மாதத்திற்கு ஒரு முறை சென்னை மாவட்டத்திலுள்ள அனைத்துத் துறைப் பணியாளர்களுக்கும் ஆட்சிமொழிப் பயிற்சி அளிக்கும் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது.

பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்திலும், பிற துறைகளிலும் ஆட்சிமொழித் திட்டப் பயிற்சிகள் தமிழ் வளர்ச்சித் துறையின் அலுவலர்களால் அளிக்கப்படுகின்றன.

**சிறந்த தமிழ் வரைவுகளுக்குப் பரிசு**

ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தைச் சிறப்பாகச் செயற்படுத்தும் அரசுப் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் தமிழில் சிறந்த வரைவுகள், குறிப்புகள் எழுதும் அரசுப் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மாவட்ட அளவில், மாவட்ட சார்நிலை, உள்ளாட்சித் துறையின் சார்நிலை, தன்னாட்சி நிறுவனச் சார்நிலை என **4** வகைப்பாடுகளிலும், மாநில அளவில் தலைமைச் செயலகத் துறை, துறைத் தலைமை, தன்னாட்சி நிறுவனத் தலைமை

---

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல். (குறள்– 471)

அலுவலகங்கள் என **3** வகைகளிலும் மொத்தம் **7** வகைப்பாடுகளில் பரிசு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்படி ஆண்டுதோறும் முதல் பரிசாக ரூ **3000/-**மும், இரண்டாம் பரிசாக ரூ **2000/-**மும், மூன்றாம் பரிசாக ரூ **1000/**-மும் வழங்கப்படுகிறது.

**ஆட்சிமொழிச் செயலாக்கத்திற்கு ஊக்கம்**

ஆட்சிமொழித் திட்டத்தினைச் சிறந்த முறையில் செயற்படுத்தும் ஒரு துறைத் தலைமை அலுவலகம், ஒரு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் ஒரு தன்னாட்சி நிறுவனத் தலைமை அலுவலகம் ஆகியவற்றிற்கு ஆண்டுதோறும் கேடயமும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது.

மாவட்டந்தோறும் மாவட்டநிலை அலுவலகங்களில் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் சிறந்து விளங்கும் ஓர் அலுவலகத்திற்கு கேடயமும், பாராட்டுச் சான்றும் வழங்கப்படுகின்றன.

**ஆட்சிச் சொல்லகராதி**

தமிழில் வரைவுகள், குறிப்புகள் எழுதிட துணை செய்யும் வகையில் ஆட்சிச்சொல்லகராதிகள் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தால் அச்சிடப்பட்டு அரசு அலுவலகங்களுக்கு விலையின்றி வழங்கப்படுகின்றன.

---

எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளாது உலகு. (குறள்– 470)

## சிறப்புச் சொல் துணையகராதி

அரசின் பல்வேறு துறைகளில் அந்தந்தத்துறையின் பயன்பாட்டிற்கு ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்கள் கொண்ட 75 சிறப்புச்சொல் துணையகராதிகள் வெளியிடப்பட்டுள்ளன. தற்போது இவற்றை ஒருங்கிணைத்து ஒரே நூலாக வெளியிடும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

## சொல் வங்கி

நடைமுறையில் உள்ள புதிய ஆங்கில, பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை உருவாக்கிப் பொது மக்கள், அரசு அலுவலகங்கள் மற்றும் ஊடகங்களின் பயன்பாட்டிற்கு அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

மாதம் ஒரு முறை மொழி வல்லுநர்கள், இதழாளர்கள், பேராசிரியர்கள் கலந்துரையாடிப் புதிய சொற்களைப் படைத்து அளிக்கின்றனர்.

## தமிழ் வளர்ச்சிப் பணிகள்

ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் தவிர தமிழுக்கும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் உறுதுணை புரியும் வகையில் தொண்டாற்றிய தமிழறிஞர்களுக்கு விருதுகள், தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு, சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி முதலிய பல்வேறு தமிழ் வளர்ச்சித் தொடர்பான பணிகளும் தமிழ் வளர்ச்சித் துறையால் மேற்கொள்ளப்பெறுகின்றன.

---

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும். (குறள்– 466)

**விழாக்களும் விருதுகளும்**

**திருவள்ளுவர் திருநாள் விழா**

அரசுச் சார்பில் திருவள்ளுவர் திருநாளில் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்விழாவில் தமிழ்ச் சான்றோர் பெயர்களில்

- திருவள்ளுவர் விருது
- பாரதியார் விருது
- பாரதிதாசன் விருது
- திருவிக விருது
- கிஆபெ விசுவநாதம் விருது

ஆகிய விருதுகள் வழங்கப்படுகின்றன. விருது பெறுவோர்க்கு விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதியுரையும் வழங்கப்படுகின்றன.

**உ வே சா விழா**

உ வே சா திருவுருவச் சிலைக்கு அவரது பிறந்தநாளான பிப்ரவரி 19ஆம் நாளில் மலர் வணக்கம் செய்யப்படுகிறது.

**ஔவையார் சிலைக்குச் சிறப்பு செய்தல்**

ஔவையார் திருவுருவச் சிலைக்கு உலக மகளிர் தினமான மார்ச்சு 8ஆம் நாளில் மலர் வணக்கம் செய்யப்படுகிறது.

---

பொருள்அற்றார் பூப்பர் ஒருகால் அருள்அற்றார்
அற்றார்மற்று ஆதல் அரிது. (குறள் –248)

**சித்திரைத் திருநாள் தமிழ்ப் புத்தாண்டு விழா**

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சட்டத் திருத்தத்தால் நெடுங்காலமாகத் தமிழ் மக்களின் நம்பிக்கை, மரபு வழிவந்த முறைகளை மதித்து சித்திரைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டாக அறிவிக்கப்பட்டு 13.4.2012 அன்று உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அந்நாளில், சிறந்த தமிழ் அமைப்பு, சிறந்த சமூகத் தொண்டாற்றிய மகளிர் ஒருவருக்கும், சிறந்த தமிழறிஞர்களுக்கும் கீழ்க்காணும் விருதுகள் வழங்கப்பட்டன.

- தமிழ்த் தாய் விருது
- ஔவையார் விருது
- கபிலர் விருது
- உ வே சா விருது

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் சிறந்த தமிழ் அமைப்பிற்குத் தமிழ்த் தாய் விருது ரூ 5.00 இலட்சமும், கேடயமும், தகுதியுரையும் பிற விருதுகளுக்கு ரூ 1.00 இலட்சமும், ஒரு சவரன் தங்கப்பதக்கமும், தகுதியுரையும் வழங்கப்பட்டன.

**சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு**

தமிழில் துறைதோறும் சிறந்து விளங்கும் நூல்கள் தொடர்ந்து சீரிய முறையில் வெளியிடப்படுவதை ஊக்குவிக்கும்

---

வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து. (குறள்– 250)

வகையில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் 31 வகைப் பாடுகளில் நூல்கள் பெறப்பட்டு ஒவ்வொரு வகைப்பாட்டிலும் தெரிந்தெடுக்கப்படும் சிறந்த நூலாசிரியர் ஒருவருக்குப் பரிசு ரூ **30,000**/–மும், சான்றிதழும் அந்நூலின் பதிப்பகத்தாருக்குப் பரிசு ரூ **10,000/–**மும் சான்றிதழும் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மேற்குறித்த பரிசுகளைத் தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று வழங்கினார்கள்.

**சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி**

தமிழில் சிறந்த நூல்கள் வெளியிடப்படுவதை ஊக்கப் படுத்தும் நோக்கில் நூலாசிரியர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது.

அரசு அச்சக மதிப்பீட்டின்படி நூலின் அச்சுச் செலவில் 60% தொகை அல்லது ரூ 25,000/– இவற்றில் எது குறைவோ அத்தொகை நூலாசிரியருக்கு நிதியுதவியாக இரு தவணைகளில் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி

---

பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின். (குறள்– 292)

2011–12ஆம் ஆண்டு முதல் நிதியுதவி பெறும் அளவு ரூ 50,000/– ஆக உயர்த்தப்பட்டு, இத்திட்டத்தின்படி நிதியுதவி பெற வரையறுத்த ஆண்டு வருமான வரம்பும் ரூ 25,000/–லிருந்து ரூ.50,000/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**திருக்குறள் பரிசு**

திருக்குறள் நெறிகளை மாணவச் செல்வங்களின் மனதில் பதியும் வகையிலும் அவர் தம் நினைவாற்றலை மேம்படுத்தும் வகையிலும் திருக்குறள் ஒப்பித்தல் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அத்திட்டத்தின்படி 1330 திருக்குறளையும் ஒப்பிக்கும் மாணவர்களுக்கு ரூ 10,000/– பரிசாக வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 36 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது

**கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டி**

தமிழ் இலக்கியப் பெருமையை வலியுறுத்தும் பேச்சுத் திறமையை ஆண்டுதோறும் மேனிலைப்பள்ளி மாணவர்களிடையேயும், கல்லூரி மாணவர்களிடையேயும் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் நடத்தப்பெற்று மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பரிசுத் தொகையை பின்வருமாறு மாணவச் செல்வங்களுக்கு உயர்த்த ஆணையிட்டுள்ளார். அவ்வாணையின்படி

---

தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும். (குறள்– 293)

தமிழ்ப்புத்தாண்டு சித்திரைத் திருநாளில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன.

| **வகைப்பாடு** | **பரிசுத் தொகை** | **முன்னர் வழங்கப்பட்ட தொகை ரூ.** | **உயர்த்தப் பட்ட தொகை ரூ.** |
|---|---|---|---|
| மாவட்ட அளவில் பள்ளி மாணவர்கள் | முதல் பரிசு | 1000/– | 10000/– |
| | இரண்டாம் பரிசு | 500/– | 7000/– |
| மாவட்ட அளவில் கல்லூரி மாணவர்கள் | முதல் பரிசு | 1000/– | 10000/– |
| | இரண்டாம் பரிசு | – | 7000/– |
| மாநில அளவில் பள்ளி மாணவர்கள் | முதல் பரிசு | 5000/– | 15000/– |
| | இரண்டாம் பரிசு | 3000/– | 12000/– |
| | மூன்றாம் பரிசு | 2000/– | 10000/– |
| மாநில அளவில் கல்லூரி மாணவர்கள் | முதல் பரிசு | 5000/– | 15000/– |
| | இரண்டாம் பரிசு | 3000/– | 12000/– |
| | மூன்றாம் பரிசு | 2000/– | 10000/– |

**நூல்கள் நாட்டுடைமை**

தமிழ் மொழிக்கு வளமும் பெருமையும் சேர்த்த தமிழறிஞர்களின் நூல்கள் அனைவரையும் சென்றடைய வேண்டும்

---

உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன். (குறள்– 294)

எனும் நோக்கில் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களின் மரபுரிமையருக்குப் பரிவுத் தொகை வழங்கப்பட்டது.

தமிழறிஞர்களின் நூல்களிலிருந்து ஒவ்வொரு அறிஞரின் ஒரு நூலை அச்சிட்டு வெளியிடும் திட்டம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வாயிலாக மேற்கொள்ளப்படுகிறது.

**தமிழ்நாட்டு வரலாற்று வரைவுத் திட்டம்**

தமிழ்நாட்டின் தொல்பழங்காலம் முதல் தற்போது வரையிலான வரலாற்றினை இன்றைய தலைமுறையினர் உரியவாறு அறியும் வகையில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன:

- தொல்பழங்காலம்
- சங்ககாலம் – அரசியல்
- சங்ககாலம் – வாழ்வியல்
- பல்லவர் காலம்
- சோழர் காலம்
- பாண்டியர் காலம்

விசயநகர நாயக்கர் காலம், மராட்டியர் காலம், ஆங்கிலேயர் காலம், விடுதலைக்குப்பின் உள்ள காலம் ஆகிய காலகட்டங்களின் தமிழக வரலாற்றைத் தொகுதிகளாக வெளியிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

---

அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு. (குறள்– 382)

## எங்கும் திருக்குறள்

உலகப் பொதுமறையாம் திருக்குறளின் ஆங்கில மொழியாக்கம் அரசு விருந்தினர் இல்லங்களிலும், தனியார் நட்சத்திர விடுதிகளின் அறைகளிலும் வைக்கப்படுகிறது. இந்நூல்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வாயிலாக அச்சிடப்பட்டுப் புகழ் பெற்ற சுற்றுலாத் தலங்களுக்கு வரும் பயணிகளுக்குத் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலமாக வழங்கப்படுகிறது.

## அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி

வாழ்நாளில் பெருமளவு தமிழுக்குப் பணியாற்றிய தமிழறிஞர்கள் தமது அகவை முதிர்ந்த நிலையில் வறுமைப்பிடியில் வருந்தக்கூடாது என்ற உயரிய நோக்கில் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 58 வயது நிறைந்து ஆண்டு வருமானம் ரூ 12,000/ குறைவாக உள்ள தமிழறிஞர்களுக்கு வாழ்நாள் முழுவதும் நிதியுதவி வழங்கப்படுகிறது. அவர்களின் மறைவுக்குப் பின்னர் மரபுரிமையருக்கும் வழங்கப்படுகிறது.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களின் இன்னலைப் போக்கும் வண்ணம் இத்திட்டத்தின்கீழ் ரூ 1000/–ஆக வழங்கப்பட்ட நிதியுதவியினை ரூ 2,000/–ஆக உயர்த்தியும், தமிழறிஞர்கள் பயன்பெறும் வகையில் ஆண்டு வருமான வரம்பு ரூ 12,000/– என்று

---

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவர்க்கு. (குறள்– 383)

இருந்ததை ரூ 24,000/– என உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

**தமிழறிஞர்களுக்கும் எல்லைக் காவலர்களுக்கும் நிதியுதவி**

தமிழ் மொழிக்கும், தமிழ்ப் பண்பாட்டுக்கும் ஏற்றமளிக்கும் வகையில் தொண்டும் தியாகமும் புரிந்தவர்களைப் பாராட்டும் வகையில் வாழ்நாள் முழுவதும் அரசு உதவித் தொகை வழங்கும் திட்டம் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம் ஜி ஆர் அவர்களால் தொடங்கப்பட்டது.

தமிழறிஞர்களுக்கு வாழ்நாள் முழுவதும் திங்கள்தோறும் நிதியுதவி ரூ 3000/– மற்றும் மருத்துவப்படி ரூ 15/– எனவும் மரபுரிமையர்க்கு நிதியுதவி ரூ 1500/– மற்றும் மருத்துவப்படி ரூ 15/– எனவும் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழக எல்லையைக் காக்கப் போராடிய பெருமக்களைப் போற்றும் வகையில் வாழ்நாள் முழுவதும் திங்கள்தோறும் நிதியுதவி ரூ 4000/– மற்றும் மருத்துவப்படி ரூ 15/–, அவர்களின் மரபுரிமையருக்கு நிதியுதவி ரூ 2000/– மற்றும் மருத்துவப்படி ரூ 15/– வழங்கப்பட்டு வருகிறது.

---

அறன்இழுக்காது அல்லவை நீக்கி மறன்இழுக்கா
மானம் உடையது அரசு. (குறள்– 384)

## 2011–2012 வழங்கிய

**நல்கை / நிதியுதவி**

| நிறுவனம் | பொருண்மை | நல்கைத் தொகை (ரூபாய் இலட்சம்) |
|---|---|---|
| தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர் | ஊதியச் செலவுகள் மற்றும் பிற செலவினங்களுக்காக | 381.19 |
| உலகத் தமிழாராய்ச்சி | ஆண்டு நல்கை | 110.27 |
| நிறுவனம், சென்னை | ஓய்வூதியப் பயன்கள் | 78.39 |
| ஆசியவியல் நிறுவனம், சென்னை | ஆண்டு நல்கை – தமிழ் ஆய்வுத் திட்டம் | 22.50 |
| திராவிடப் பல்கலைக் | ஆண்டு நல்கை | 12.15 |
| கழகம், குப்பம் | தமிழில் முதுகலை, ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்டம் பயிலும் மாணவர்களுக்கு நிதியுதவி | 1.67 |

---

இன்சொலால் ஈத்துஅளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்துஇவ் வுலகு. (குறள்– 387)

**திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் பாடல்கள் சீனம் அரபு மொழியாக்கம்**

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உலகப் பொதுமறையான திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் பாடல்களைச் சீனம் மற்றும் அரபு மொழிகளில் மொழிபெயர்த்திட ரூ 3.20 கோடி வழங்க ஆணையிட்டுள்ளார்.

**உலகத் தமிழ்ச் சங்கம்**

முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் பாரத ரத்னா எம் ஜி ஆர் அவர்களால் உருவாக்கப்பட்ட உலகத் தமிழ்ச் சங்கம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதன்படி புதுப்பொலிவோடு செயற்பட, பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

- உலகத் தமிழ்ச் சங்கத்தின் பெயரில் (14.15 ஏக்கர்) நில மாற்றம் செய்தல்
- ரூ.100 கோடி நிதியினை உலகத் தமிழ்ச் சங்கத்திற்கு நிதி மாற்றம்
- அலுவலகம் உருவாக்கம்
- பணியாளர் நியமனம்

---

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும். (குறள்– 388)

## மொழிபெயர்ப்புப் பிரிவு – தலைமைச் செயலகம்

தமிழ் ஆட்சிமொழிச் சட்டம், 1957–ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்ததன் விளைவாக, ஆட்சி மொழியாகத் தமிழ்மொழி முதன்மை பெற்றது.

ஆங்கிலேய அரசின் தொடக்கம் முதலாகவே தலைமைச் செயலகத்தில் பொதுத்துறையின் ஓர் அங்கமாகத் தொடங்கி, பின்னர் தலைமைச் செயலகத்திலுள்ள தமிழ் வளர்ச்சித் துறையுடன் இணைக்கப்பட்டது.

### அரசுக் கோப்பு நிரல்

தலைமைச் செயலகத்தின் 36 துறைகளிலிருந்து வரப்பெறுகிற அமைச்சரவைக் குறிப்பு, அரசிதழில் வெளியிடப்படும் அறிவிக்கை, பொதுத் துறை கமுக்கக் குறிப்பு, விசாரணை ஆணைய அறிக்கை, அரசாணை, சுற்றோட்டக் குறிப்பு, தகுதியுரை, மானியக் கோரிக்கை, துணை மதிப்பீடு, பொது நிறுவனங்கள் மற்றும் பொதுக் கணக்குக் குழுக்களின் அறிக்கை, வனத்துறை அறிவிக்கை, இந்துசமய அறநிலையத் துறையின் நிருவாக வரைவுத் திட்டம், மாநில மனித உரிமை ஆணைய அறிக்கை, ஊடக வெளியீடு, சட்டப் பேரவை வினாத் தொகுப்பு, நிதிநிலை அறிக்கை மற்றும் கவன ஈர்ப்பு தீர்மானம் ஆகிய ஆங்கிலக் கோப்புக்கள் தமிழாக்கம் செய்யப்படுகின்றன.

### சீர்மிகு பணி

கடந்த பதினோரு மாதங்களில் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்ப்புப் பணிகள்:

---

கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி. (குறள் – 390)

- மாண்புமிகு முதலமைச்சரின் ஆங்கிலச் சொற்பொழிவுகள்
- தமிழ் நாடு தொலைநோக்குத் திட்டம் 2023
- நான்காம் நிதிக் குழு அறிக்கை
- தேர்தல் குறித்த வாக்குறுதிகள்
- ஊராட்சித் தேர்தல் விதித் தொகுப்பு
- வாக்குச் சாவடி தலைமை அலுவலர்களுக்கான வழிகாட்டிக் குறிப்பேடு
- தேர்தல் வாக்குறுதித் தொகுப்பு
- தேர்தல் செலவுக் கண்காணிப்புத் தொகுப்பு
- தேர்தல் பயிற்சி நடைமுறை நூல்
- மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் அறிக்கை
- பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் ஆண்டறிக்கை
- தேசியப் பேரிடர் மேலாண்மை வழிகாட்டித் தொகுப்பு
- மத்திய தத்தெடுப்பு ஆணையத்தின் வழிகாட்டிக் குறிப்பேடு

இவ்வாறு பல்வேறு நிலைகளிலும் நேர்வுகளிலும் **மொழி பெயர்ப்பின்றி எதுவும் முழுமையாகாது** என்ற முதுமொழிக்கேற்ப துறையின் பணிகள் அமைகின்றன.

---

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. (குறள் – 391)

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

## தோற்றம்

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்ற கருத்தின்படி தமிழுக்கென்று பிரெஞ்சு அகாதெமி போன்று தமிழுக்கு உயராய்வு நிறுவனம் உருவாக்கப்படவேண்டுமென்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது.

## நோக்கம்

- தமிழ்க் கல்வியில் உயராய்வினை வளப்படுத்துவது
- உயர் தமிழாய்வினை ஊக்குவிக்கும் கல்விச் சூழலை உருவாக்குவது
- ஆய்வுக்குகந்த தரமான நூலகம் பேணுவது
- தமிழரல்லாதார்க்கு தமிழ் மொழியினைப் பயிற்றுவிப்பது
- பல்துறை ஆராய்ச்சியாளர்களுக்கு பயிற்சி அளிப்பது
- பிறநாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்வது
- பிறநாட்டு தமிழறிஞர்களுடன் ஆய்வுத் தகவல்களைப் பகிர்ந்து கொள்வது
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் கல்விச் சூழல் வளம் பெறும் வகையில் அயலகத் தொடர்புகளை மேம்படுத்துவது

## ஆளுகைக்குழு

உயராய்வுத் தமிழ்ப்பணிகள் தொடர்ந்து நடந்திட ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் தமிழ்நாடு அரசின் மாண்புமிகு பள்ளிக்

---

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து. (குறள்– 398)

கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அமைச்சரின் தலைமையில் அலுவல் வழி துணைத் தலைவர்கள் உறுப்பினர்களைக் கொண்ட ஆளுகைக்குழுவுடன் தன்னாட்சி அமைப்பாக செயல்படுகின்றது.

**புலங்கள்**

- தமிழ் இலக்கியம் மற்றும் சுவடிப்புலம்
- தமிழ் மொழி மற்றும் மொழியியல் புலம்
- சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப்புலம்
- அயல்நாட்டுத் தமிழர் புலம்

**செயற்பாடுகள்**

தமிழ் உயராய்வு நிறுவனமாகத் திகழும் இந்நிறுவனத்தில் கல்விசார் அலுவலர்கள் இலக்கியவியல், இலக்கணவியல், மொழியியல், சமூகவியல், பண்பாட்டியல், நாட்டுப்புறவியல், மொழிபெயர்ப்பியல் போன்ற பிரிவுகளில் தனித்தனியே திட்டப்பணிகளை மேற்கொள்கின்றனர்.

மேலும், கீழ்க்குறிப்பிடப்படும் கற்பித்தல் பணிகளும் பேராசிரியப் பெருமக்களால் நிகழ்த்தப் பெறுகின்றன:

- தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத, பிற மொழியாளர்களுக்கு தமிழ் மொழி கற்பித்தல்
- முனைவர் பட்ட ஆய்வாளர்களை சென்னைப் பல்கலைக்கழக இணைவுடன் நெறிப்படுத்துதல்
- ஆய்வியல் நிறைஞர் பட்ட மாணவர்களைத் தமிழ்ப் பல்கலைக்கழக இணைவுடன் நெறிப்படுத்துதல்

---

கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை. (குறள்– 400)

## அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

தனிமனிதக் கொடை அல்லது பலரது முயற்சிகள் மூலம் 34 அறக்கட்டளைகள் நிறுவப்பெற்று அறக்கட்டளை சொற்பொழிவுகள் நடத்தப்பெற்றன.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயரால் நிறுவப்பட்ட அறக்கட்டளை மூலமாக மாண்புமிகு முதல்வரின் பிறந்த நாளை முன்னிட்டு பொழிவுகள் நடத்தப்பட்டன.

## நூல் வெளியீடு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இதுவரை 730 தரமான ஆய்வு நூல்களை கீழ்வரும் பிரிவுகளில் வெளியிட்டுள்ளது:

- கல்விசார் அலுவலர்களின் திட்டப்பணிகள்
- நிறுவனக் கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்புகள்
- அறக்கட்டளை சொற்பொழிவுகள்
- சுவடிப் பதிப்புகள்
- மொழிபெயர்ப்புகள்
- அரியநூல் மறுபதிப்புகள்
- பிற தமிழறிஞர்களின் படைப்புகள்

## தமிழியல் – பருவ இதழ்

தமிழ்கூறும் நல்லுலக ஆய்வியலாளர்களுக்கிடையே இணைப்புப் பாலமாக அமையும் இருமொழியிலான **தமிழியல்** ஆய்விதழை ஆண்டுக்கு இருமுறையெனத் தொடர்ந்து வெளியிடல் என இதன் தமிழ்ப்பணிகள் பரந்து விரிந்தமைகின்றன. இவ்விதழில்

---

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். (குறள்– 416)

உள்ள கட்டுரைகளை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வலைத் தளத்திலிருந்து (www.ulakaththamizh.org) பதிவிறக்கம் செய்யவும் வகை செய்யப்பட்டுள்ளது.

**ஆய்வியல் நிறைஞர் பட்டம்**

தமிழ்நாடு அரசின் இசைவுடன் முழுநேர மற்றும் பகுதிநேர தமிழ் ஆய்வியல் நிறைஞர் வகுப்புகளை நடத்தி வருகிறது.

**ஆய்வு நூலகம்**

ஆய்வுப் பணியினை இடரின்றி செவ்வனே தொடர்வதற்கு, நிறுவனக் கல்விப் பணியாளர்கள், ஆய்வாளர்கள் மட்டுமின்றி இந்திய ஆட்சிப்பணித் தேர்வு மாணவ, மாணவியர், முதுகலை மாணவ மாணவியர், தமிழாய்வாளர்கள் என அனைவரும் பயன்படுத்தும் வகையில் நிறுவன நூலகம் செயல்படுகிறது.

**நல்கை**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் செலவினங்கள் அனைத்தையும் மேற்கொள்ள தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் நல்கை வழங்கி வருகிறது. இந்த நிதியாண்டில் நல்கை ஒதுக்கீடாக ரூ 129.14 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் பாடல்கள் அரபு மொழியில்**

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணைப்படி தமிழ்மொழியின் பெருமையை, அரபு மொழியினரும் அறியச் செய்வதற்காக, திருக்குறள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பாரதியார், பாரதிதாசன் பாடல்களை அரபு மொழியில் மொழிபெயர்க்கும் பணி நடைபெறுகிறது.

---

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (குறள்– 423)

## செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

மொழியின் வளமைக்கும் வளர்ச்சிக்கும் அம்மொழியில் வெளிவந்துள்ள அகரமுதலிகள் சான்றுரைப்பனவாகும். தமிழில் விரிவான சொற்பிறப்பியல் பேரகரமுதலியைத் தொகுத்து வெளியிடும் பொருட்டு, ***'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்'*** தோற்றுவிக்கப்பட்டது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி தொகுத்து வெளியிடும் திட்டத்தின்கீழ் 31 பகுதிகள் தொகுத்து முடித்து வெளியிடப்பெற்றுவிட்டன.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் திருத்திய பதிப்பினை 12 பெரும் மடலங்களாக ஒவ்வொரு மடலமும் 1,000 பக்கங்களுடன் சீரான வடிவில் செவ்விய முறையில் தொகுத்து வெளியிடப்படவுள்ளது. வாடகை கட்டடத்தில் இயங்குகின்ற அலுவலகம் சொந்தக் கட்டடட்திற்கு மாற்றப்படவுள்ளது.

---

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில். (குறள்– 428)

## தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

### நோக்கம்

தமிழர்தம் இலக்கிய வளம், மெய்யியல், வாழ்வியல், கலைகள், பண்பாட்டியல் ஆகியவற்றின் வரலாற்றை அடையாளமாகக் கொண்டு ஒளிவீசித் திகழும் தமிழ்ப் பல்கலைக்கழகம் 1981 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15–ஆம் நாள் புரட்சித்தலைவர் டாக்டர் எம் ஜி ஆர் அவர்களால் தோற்று விக்கப்பட்டது.

### மொழியின் தொன்மைத் தேடல்

- இலக்கியக் கோட்பாடுகள், திறனாய்வுகள் அடிப்படையில் சங்க காலம் முதல் இக்காலம் வரை தோன்றியுள்ள பல்வகை இலக்கியங்களை நுட்பமாக ஆராய்தல்
- தமிழிலக்கணக் கோட்பாடுகளுடன், மொழியியல் கொள்கைகளையும் ஆராய்ந்து தமிழ் மொழியின் அமைப்பினையும் பயன்பாட்டினையும் விளக்குதல்
- அரிய தமிழ் நூல்களைப் பிற மொழிகளிலும், பிறமொழி நூல்களைத் தமிழிலும் மொழி பெயர்த்தல்
- நாட்டுப்புறக் கலைகளை வாழ்வியல் மேம்பாட்டு நோக்குடன் ஆராய்தல், ஆவணப்படுத்துதல்

---

தெரிந்த இனத்தொடு தேர்ந்து எண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல். (குறள்– 462)

**அரிய ஆவணங்களை வெளிக் கொணர்தல்**

- இதுகாறும் வெளியிடப்படாத தமிழ்க் கல்வெட்டுக்களை ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் வெளியிடுதல்
- ஓலைச்சுவடிகள், பழைய கையெழுத்துச் சுவடிகள், முதல் பதிப்புப்பெற்ற பழைய நூல்கள் ஆகியவற்றைப் பேணிக் காத்தல் மற்றும் மறுபதிப்பு வெளியிடுதல்

**மக்களை நோக்கிய பயணம்**

- இலக்கியக் களஞ்சியங்கள், இலக்கணக் களஞ்சியங்கள், அறிவியல் கலைச் சொல் களஞ்சியங்கள், மெய்யியல் களஞ்சியங்கள் முதலியவற்றை உருவாக்குதல்
- தமிழர்தம் நாட்டுப்புற மருத்துவம் எனப்படும் சித்த மருத்துவத்தின் பயன்பாட்டினை மக்களிடையே பரப்புதல், மரபுசார் அறிவியல் செய்திகளை ஆவணப்படுத்தி அவற்றை மீட்டுருவாக்கம் செய்தல்

**மரபுகளை மீட்டெடுத்தல்**

- கட்டடக்கலை, சிற்பக்கலை, ஆடற்கலை, பாடற்கலை, நாடகக்கலை, ஓவியக்கலை உள்ளிட்ட மரபுசார் கலைகளை ஆராய்தல்
- மறைந்து போன வரலாற்றுச் சின்னங்களை நில அகழாய்வு, நீரகழாய்வு முதலியவற்றின் வாயிலாக கண்டெடுத்து அவற்றைப் பற்றிய அருஞ்செய்திகளை வெளியிடுதல்

---

ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார். (குறள்– 463)

**அயலக உறவு**

- அயல்நாட்டுத் தமிழர்க்குப் பயன்படும் பாங்கில் மொழி, இலக்கியம், பண்பாடு தொடர்பான ஆக்கப்பணிகளை ஆற்றுதல்
- அயல்நாட்டார் தமிழருடன் கொண்ட உறவு பற்றியும் புலம் பெயர்ந்து சென்ற தமிழர்கள் தாம் சென்ற இடங்களில் தம் மரபுசார் பண்பாட்டினைக் கடைபிடித்தல் பற்றியும் ஆராய்தல்
- இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழர் பண்பாட்டின் பங்கு பற்றிய ஆய்வு மேற்கொள்ளுதல்

இத்தகைய முதன்மையான நோக்கங்களுடன் தமிழ்ப் பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகின்றது.

**புலங்கள் – துறைகள்**

தமிழ்ப் பல்கலைக்கழகம், கலைப்புலம், சுவடிப்புலம், வளர் தமிழ்ப்புலம், மொழிப்புலம், அறிவியல்புலம் ஆகிய புலங்களின் கீழ் 25 துறைகளுடன், தூய தமிழ்ச் சொல்லாக்க அகர முதலிகள் திட்டம், கலைக் களஞ்சியத் திட்டம், பெருஞ்சொல்லகராதித் திட்டம், அச்சகம், பதிப்பகம், நூலகம், அருங்காட்சியகம் போன்றவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

**கல்விப் பணி**

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம், ஆய்வியல் நிறைஞர் பட்டம், முதுகலை, முது அறிவியல், இளங்கல்வியியல் பட்டம், யோகா மற்றும் இசைத் தொடர்பான பெருஞ்சான்றிதழ், சான்றிதழ் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

---

அன்பு அறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு. (குறள்– 513)

183 முனைவர் பட்ட மாணவர்களும், 302 ஆய்வியல் நிறைஞர் மாணவர்களும் 114 முதுகலை, முதுஅறிவியல் மாணவர்களும், 96 இளங்கல்வியியல் மாணவர்களும் பயில்கின்றனர்.

### தொலைநிலைக் கல்வி

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 2006–2007–ஆம் கல்வி ஆண்டில் தொடங்கப்பட்ட தொலைநிலைக் கல்வி இயக்ககம் வழியாகத் தமிழ் வரலாறு, தமிழிசை, புவியியல் போன்ற பல்வேறு பாடப்பிரிவுகளுக்கு இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்புகள் நடத்தப்படுகின்றன. 2011–2012–ஆம் கல்வியாண்டில் பட்டப் படிப்புகளில் 2340 மாணவர்கள் சேர்க்கை பெற்றுள்ளனர்.

### உதவித் தொகை

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பயிலும் 1121 மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகையாக ரூ 133.72 இலட்சம் அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

### ஆய்வுப்பணிகள்

இப்பல்கலைக்கழக ஆசிரியர்கள், கற்பித்தல் பணிகளோடு ஆய்வுப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர். பல்கலைக் கழக நல்கைக்குழு, மைசூர் செம்மொழி ஆய்வுமையம் மற்றும் பிற நிறுவனங்களின் நல்கை மற்றும் நிதியுதவியுடன் கல்வியாளர்கள் பெருந் திட்டங்களையும் குறுந்திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

---

இதனை இதனால் இவன்முடிக்கும் என்று ஆய்ந்து
அதனை அவன்கண் விடல். (குறள்– 517)

**பல்கலைக்கழக நல்கைக்குழு**

பல்கலைக்கழக மானியக்குழு நல்கையின் கீழ் 11 ஆய்வுத் திட்டங்களும், பிற நிறுவனங்களின் நல்கையின் கீழ் 10 ஆய்வுத் திட்டங்களும், தமிழ்ப் பல்கலைக்கழக நிதியின்கீழ்–43 ஆய்வுத் திட்டங்களும் நடைபெற்று வருகின்றன.

**அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்**

2011–12–ஆம் ஆண்டில் 34 அறக்கட்டளைச் சொற்பொழிவுகளும் 22 கருத்தரங்குகளும் நிகழ்த்தப்பெற்றன.

**சீன மொழியில் திருக்குறள்**

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணைப்படி தமிழ்மொழியின் பெருமையை, சீன மொழியினரும் அறியச் செய்வதற்காக, திருக்குறள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பாரதியார், பாரதிதாசன் பாடல்களை சீன மொழியில் மொழிபெயர்க்கும் பணி நடைபெறுகிறது.

**கணினி வழித் தமிழ் வளர்ச்சி**

கணினி வழி தமிழ் வளர்ச்சிக்கும் ஆராய்ச்சி மேம்பாட்டிற்கும் ரூ 12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தனித்தன்மையை மீட்டெடுத்தல்**

ஆய்வுப் பணிகளுக்காகவும் காலமுறை இதழ்கள் வெளியிடுவதற்காகவும் ரூ 135.85 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

---

குடிஎன்னும் குன்றா விளக்கம் மடிஎன்னும்
மாசுஊர மாய்ந்து கெடும். (குறள்– 601)

**உயராய்வு மையம்**

பல்கலைக்கழக நல்கைக்குழு ரூ 2.00 கோடி நிதியுதவி அளித்ததன் அடிப்படையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் செவ்வியல் மொழிகள் உயராய்வு மையம் நடைபெற்று வருகிறது. உலக இலக்கிய வகைகளும் அவற்றின் வடிவங்களும் ஆராயப்பட்டு வருகின்றன.

**வளர்தமிழ்ச் சமுதாய வானொலி**

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் செயற்படுத்தப்பட்டு வரும் **'வளர்தமிழ் சமுதாய வானொலி'** மக்களுக்கு பயன்படும் வகையில் பின்வரும் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப் படுகிறது.

- தினம் ஒரு திருக்குறள்
- இந்த நாள் நல்ல நாள்
- தமிழிசை
- அறிவியல் நலவாழ்வு விழிப்புணர்வுப் பாடல்கள்
- பல்கலைக்கழக நிகழ்வுகள்

**நிதி நல்கை**

2011–2012–ஆம் ஆண்டில் தொகுப்பு நல்கையாக ரூ 381.19 இலட்சமும், இதர நல்கையாக ரூ 1,76,43,883/–ம், பகுதி II திட்டத்தின் கீழ் ரூ 95.00 இலட்சமும் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

---

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்துஊர்வது அஃதுஒப்பது இல். (குறள்– 621)

## ஆசியவியல் நிறுவனம்

ஆசியவியல் நிறுவனம் தமிழாய்வை ஒப்பியல் சார்ந்த பன்முகநோக்கில், தமிழர்களின் அயல்நாட்டுத் தொடர்புகளை ஆய்வு செய்யவும், பிற ஆசிய நாடுகளின் பண்பாட்டுச் செழிப்புக்குத் தமிழ்ப்பண்பாடு வழங்கிய பங்களிப்புகளை ஆய்வு செய்யவும், ஆசிய மொழிகளுக்கும் தமிழ்மொழிக்கும் இடையே காணப்படும் தொடர்புகளை நிலை நாட்டவும், புலம்பெயர்ந்த தமிழர்களின் வாழ்வியல் முறைகளை பிறநாட்டு அறிஞர்களின் துணையோடு ஆய்வு செய்தும் ஆய்விதழ்களை வெளியிட்டு தமிழாய்வுப் பணிகளை செய்து வருகிறது.

புரட்சித்தலைவர் டாக்டர் எம் ஜி ஆர் அவர்களால் 1983–ஆம் ஆண்டு முதல் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக நல்கை வழங்க ஆணையிட்டு 28 ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகிறது.

அச்சில் வெளிவராத ஓலைச்சுவடிகளிலிருந்து பல நூல்களைப் பதிப்பித்து ஆங்கில மொழிபெயர்ப்போடு வெளியிட்டுள்ள இந்நிறுவனம், செவ்வியல் இலக்கிய வரிசையில் அமைந்துள்ள சங்க இலக்கியங்கள் போன்ற பேரிலக்கியங்களைத் தொடர்ந்து மொழிபெயர்த்தும் வெளியிடுகிறது.

---

பிரிதலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருட்தலும் வல்லது அமைச்சு. (குறள்– 633)

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ் வளர்ச்சிக்கும், தமிழறிஞர்களின் நலனுக்காகவும் பல்வேறு தலையாயப் பணிகளை அறிமுகப்படுத்தியுள்ளார்கள்.

**மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் பொன்மொழியான **“இன்றும் தமிழ் என்றும் தமிழ்”** என்பதற்கேற்ப இனிய தமிழ் மொழியின் ஈடில்லாத தனிச்சிறப்பை உலகெங்கும் பரவிடச் செய்ய முயற்சிகள் தளர்வின்றி மேற்கொள்ளப்படுகின்றன.

**என்.ஆர். சிவபதி**
**பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும்**
**இளைஞர் நலத்துறை அமைச்சர்**

---

தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு. (குறள்– 634)

மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாஉள முன்நிற் பவை. **(குறள்– 636)**

# இணைப்பு – I

## 2012–2013 – திட்டப்பணிகள்

| பொருள் | (நிகர செலவு – ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|
| | 2011–12 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2011–12 திருத்த மதிப்பீடு | 2012–13 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
| 2059 பொதுப் பணிகள் | 9,50 | 9,50 | 9,50 |
| 2202 பொதுக் கல்வி | 22,69,13 | 25,74,32 | 23,85,63 |
| 2251 தலைமைச் செயலகம் சமூகப் பணிகள் | 5,84,98 | 4,79,57 | 6,73,35 |
| **மொத்தம்** | 28,63,61 | 30,63,39 | 30,68,48 |

# இணைப்பு – II

## 2012–2013 – பகுதி II திட்டப்பணிகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| தொ. எண். | திட்டப் பணிகளின் விவரம் | இறுதி நிலைச் செலவு | | | 2012–2013 இல் செலவு | | | |
| | | தொடரினச் செலவு | தொடராயினச் செலவு | மொத்தம் | வருவாய்க் கணக்கில் செலவு | மூலதனக் கணக்கில் செலவு | கடன் கணக்கில் செலவு | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | **தலைமைச் செயலகம்** | | | | | | | |
| 1. | இரண்டு நகலிகள் வாங்குதல் | - | 1.00 | 1.00 | 1.00 | - | - | 1.00 |
| 2. | துறை அலுவலர்களின் அறையின் பயன்பாட்டில் உள்ள கணினிகளுக்கு ஆறு பிரிண்டர்கள் வாங்குதல் | – | 0.60 | 0.60 | 0.60 | - | - | 0.60 |
| 3. | செயலாளரின் அறைக்கு நிகரி ஒன்று வாங்குதல் | – | 0.15 | 0.15 | 0.15 | - | - | 0,15 |
| 4. | துறைச் செயலாளரின் பயன்பாட்டிற்காக மடிக்கணினி ஒன்று வாங்குதல் | – | 0.50 | 0.50 | 0.50 | - | - | 0.50 |
| 5. | துறைச் செயலாளரின் பயன்பாட்டிற்காக எல்.சி.டி புரஜெக்டர் ஒன்று வாங்குதல் | – | 1.00 | 1.00 | 1.00 | - | - | 1.00 |
| | **தமிழ் வளர்ச்சி இயக்ககம்** | | | | | | | |
| 6. | நிகரி ஒன்று வாங்குதல் | – | 0.15 | 0.15 | 0.15 | – | – | 0.15 |
| 7. | இயக்குநர் மற்றும் இயக்கக அலுவலர்களின் பயன்பாட்டிற்காக அறைகலன்கள் வாங்குதல் | – | 1.80 | 1.80 | 1.80 | – | – | 1.80 |
| 8. | இயக்ககத்தின் 16 சார்நிலை அலுவலகங்களுக்கு கணினி மற்றும் அச்சுக் கருவி வாங்குதல் | – | 11.20 | 11.20 | 11.20 | – | – | 11.20 |
| 9. | நான்கு கணினிகளும் நான்கு லேசர் அச்சுக் கருவிகளும் வாங்குதல் | – | 2.48 | 2.48 | 2.48 | – | – | 2.48 |
| 10. | குடிநீர் சுத்திகரிப்புக் கருவிகள் இரண்டு வாங்குதல் | - | 0.80 | 0.80 | 0.80 | - | - | 0.80 |
| 11. | ஆட்சிமொழித் திட்டப் பயிற்சி மையத்திற்காக ஜெனரேட்டர் வாங்குதல் | - | 0.75 | 0.75 | 0.75 | - | - | 0.75 |
| 12. | நூலகத்திற்கு குளிர்சாதன கருவிகளும், தூசு உறிஞ்சும் கருவியும் வாங்குதல் | - | 0.85 | 0.85 | 0.85 | - | - | 0.85 |
| 13. | இயக்குநருக்கு மடிக்கணினி வாங்குதல். | - | 1.00 | 1.00 | 1.00 | - | - | 1.00 |

| தொ. எண். | திட்டப் பணிகளின் விவரம் | இறுதி நிலைச் செலவு | | | 2012–2013 இல் செலவு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | தொடரினச் செலவு | தொடராயினச் செலவு | மொத்தம் | வருவாய்க் கணக்கில் செலவு | மூலதனக் கணக்கில் செலவு | கடன் கணக்கில் செலவு | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | **உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்** | | | | | | | |
| 14. | தமிழியல் இதழ் அச்சிட நிதியுதவி அளித்தல் | - | 10.00 | 10.00 | 10.00 | - | - | 10.00 |
| 15. | கல்வி அலுவலர்களுக்கு மேசை நாற்காலி வாங்குதல் | - | 2.45 | 2.45 | 2.45 | - | - | 2.45 |
| 16. | தமிழக மரபுசார் கலைகளும் கலைஞர்களும்–பயிலரங்கு | - | 2.00 | 2.00 | 2.00 | – | – | 2.00 |
| 17. | பள்ளிக் கல்வியில் தமிழ் கற்பித்தல் | - | 2.00 | 2.00 | 2.00 | – | – | 2.00 |
| 18. | ஓலைச் சுவடிகள் – பன்னாட்டுக் கருத்தரங்கு | - | 2.00 | 2.00 | 2.00 | – | – | 2.00 |
| 19. | அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள்–தேசியக் கருத்தரங்கு | - | 2.00 | 2.00 | 2.00 | – | – | 2.00 |
| 20. | வெளியீடுகளை வரவேற்பறையில் காட்சிப்படுத்த மர அலமாரி வாங்குதல் | - | 1.55 | 1.55 | 1.55 | – | – | 1.55 |
| 21. | இரும்பு பீரோ வாங்குதல் | - | 1.00 | 1.00 | 1.00 | – | – | 1.00 |
| | **தமிழ்ப் பல்கலைக்கழகம்** | | | | | | | |
| 22. | நிதிப்பிரிவு காசாளர் அறை – பணம் எண்ணும் கருவி, கள்ளநோட்டு அறியும் கருவி, நிதிக்கணக்கு மென்பொருட்கள், கணினி | - | 2.00 | 2.00 | 2.00 | – | – | 2.00 |
| 23. | கோயிற் களப்பணி மேற்கொள்ள சிற்றுந்து(40+1) வாங்குதல் | - | 13.00 | 13.00 | 13.00 | – | – | 13.00 |
| | **செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்** | | | | | | | |
| 24. | பேரகரமுதலி உயிரெழுத்துகள் பகுதியைக் குறுந்தகட்டில் பதிவு செய்து பாதுகாத்தல் | - | 1.00 | 1.00 | 1.00 | – | – | 1.00 |
| 25. | திட்டப் பயன்பாட்டிற்காக கணினி எழுதுபொருள்கள் முதலியன வாங்குதல். | - | 0.50 | 0.50 | 0.50 | – | – | 0.50 |
| | **மொத்தம்** | - | **61.78** | **61.78** | **61.78** | - | - | **61.78** |